என் பெயர் : ளு. ரோ'ன் குமார்

என் தந்தை பெயர்: ளு.டீ.சத்தீ'குமார்

என் தாயார் பெயர் : ளு.ஹேமலதா

என் அண்ணன் பெயர்: ளு.தீரஜ்குமார்



என் அப்பா ஆம்பூர் 1 முதல் 9 ம் வகுப்பு வரை இந்து மேல்நலைப்பள்ளியில் படித்தார். 10 முதல் 12 - ம் வகுப்பு வரை கன்கார்டியா மேல்நிலைப்பள்ளியிலும் பட்டபடிப்பு சென்னையில் படித்தார். தற்போது ஆம்பூரில் நகைக்கடை நடத்தி வருகிறார். புள்ளியில் ஆசிரியரிடம் பேசியபோது என் அப்பா நல்ல மாணவனாக இருந்தார். நல்ல மதிப்பெண் எடுப்பார் என்றும் அனைத்து போட்டிகள் படிப்பு அனைத்திலும் நல்ல மாணவனாக இருப்பார் என்று அவர் ஆசிரியர் நு.பு.சுப்ரமணியம் ஆ.யு.இ ஆ.நுன அவர்கள் கூறினார். அவருக்கு பள்ளி பருவத்தில் மிகவும் பிடித்த விளையாட்டு கிரிக்கெட் என்றார். அவர் ஆசிரியர் மிகச்சிறந்த ஆசிரியர் என்ற விருது கலைஞர் கருணாநிதி அவர்களிடம் பெற்றுள்ளார். அப்பா ஆசிரியர் சொல்படி கேட்டு நடப்பார்.




என் அம்மா 5 ம் வகுப்பு வரை ஊராட்சி ஒன்றித் துவக்கப்பள்ளியில் படித்தார். 6 முதல் 10 வரை இந்து மகளிர் உயர்நிலைப்பள்ளியில் படித்ததார். ஆவர் பள்ளியில் அவர்கள் ஆசிரியர்கள் ஓய்வு பெற்றுவிட்டார்கள். அதனால் அவர் துவக்கப்பள்ளி ஆசிரியை திருமதி.தயாநிதி டீ.யு.இ அவர்களை சந்தித்தேன். அவர் கூறினார் அம்மா படிக்கும் காலத்தில் நல்ல பெண்ணாக இருந்தார் என்றும் அமைதியாக இருப்பார் என்றும் 70 முதல் 80 மதிப்பெண்கள் எடுப்பாள் என்றும் விளையாட்டு, பேச்சுபோட்டி, தையல் போட்டி, தையல் போட்டி, கலைநிகழ்சிகள் ஆகியவற்றில் கலந்து கொண்டு முதல் பரிசு வாங்குவாள் என்றும் கூறினார். அவரும் ஆசிரியர் சொல்படி கேட்டு நடப்பார் என்று கூறினார். என் அண்ணா தற்போது 10-ம் வகுப்பு படிக்கிறார். அவர் நன்றாக படிக்கிறார். அவரும் ஆசிரியர் சொல்படி கேட்டு நடப்பார். என் அப்பா அம்மா என்னை நன்றாக பார்த்துக் கொள்கிறார்கள். அவர்களை போல் நானும் ஆசிரியர் சொல்படி கேட்டு “நல்லமாணவனாக” வருவேன் என்று ஆசிரியர் தினத்தன்று உறுதிமொழி எடுத்துக் கொள்கிறேன்.

